| வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் : | **இராமநாதபுரம்** | காலம்: | **29/06/2024** | முதல் | **03/07/2024** |
| அறிக்கை எண் : | **052/ 2024** | வெளியீட்டு நாள்: | | **28/06/2024** | |

**இராமநாதபுரம் மாவட்டத்தின் கடந்த வார வானிலை**

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 37°-38° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 25°-27° செல்சியஸ் ஆகவும் பதிவானது. மேலும் மழை பெறப்பட்டது.

| கடந்தவார வானிலை (23.06.2024முதல் 27.06.2024) | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 03-07-2024- 08.30 வரை | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2306 | 24/06 | 25/06 | 26/06 | 27/06 | தேதி | நாள்-1 29/06 | நாள்-2 30/06 | நாள்-3 01/07 | நாள்-4 02/07 | நாள்-5 03/07 |
| 7.3 | 0.0 | 1.0 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 0 | 0 | 2 | 2 | 2 |
| 36 | 36 | 38 | 38 | 37 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 35 | 36 | 36 | 35 | 35 |
| 24 | 25 | 25 | 27 | 25 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 25 | 25 | 25 | 24 | 24 |
| 5 | 6 | 5 | 7 | 8 | மேக மூட்டம் (ஆக்டா) | 4 | 5 | 7 | 7 | 7 |
| 68 | 62 | 69 | 66 | 74 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 70 | 70 | 70 | 70 | 60 |
| 61 | 74 | 34 | 50 | 75 | | 50 | 50 | 50 | 50 | 50 |
| 4 | 11 | 6 | 4 | 2 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 22 | 22 | 22 | 18 | 18 |
| தென் மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு | தெற்கு | காற்றின் திசை | தெற்கு | தெற்கு | தென் மேற்கு | தெற்கு | தென் மேற்கு |

**குறுஞ்செய்தி :**

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் ஜூலை 1, 2 மற்றும் 3 தேதி லேசான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 35°-36° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 24°-25° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 18 முதல் 22 கி.மீ வேகத்தில், தெற்கு மற்றும் தென்மேற்கு திசைகளிலிருந்து காற்று வீசக்கூடும்.

**பொது ஆலோசனை:**

**அடுத்த வாரத்திற்கான விரிவாக்கபட்ட வரம்பு வானிலைமுன்னறிவிப்பு(28ஜூன்-11 ஜூலை 2024):**

**மழைப்பொழிவு :**

28-06-2024 - 04-07-2024: நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் வாரத்தில் மாவட்டத்தில் குறைவான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

05-07-2024 - 11-07-2024: நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் வாரத்தில் மாவட்டத்தில் இயல்பானது முதல் இயல்பை விட சற்று கூடுதலான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

**அதிகபட்ச வெப்பநிலை :**

28-06-2024 - 04-07-2024: மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது பொருத்தமட்டில் இயல்பை ஒட்டியே காணப்படும். 34° செல்சியஸ் முதல் 36° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

05-07-2024 - 11-7-2024: மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது பொருத்தமட்டில் பொதுவாக இயல்பை ஒட்டியே காணப்படும். 36° செல்சியஸ் முதல் 36° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு

**குறைந்தபட்ச வெப்பநிலை :**

28-06-2024 - 11-07-2024: மாவட்டத்தில் குறைந்தபட்ச வெப்பநிலையை பொருத்தமட்டில் இயல்பை ஒட்டியே காணப்படும். 24° செல்சியஸ் முதல் 28° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

அடுத்த 5 நாட்களுக்கு மணிக்கு 18 முதல் 22 கி.மீ. வேகத்தில் காற்று வீசும் என எதிர்பார்க்கப்படுவதால் விவசாயிகள் கரும்பு, வாழை, பப்பாளி, கொய்யா, முருங்கை போன்ற பயிர்களுக்கு மண் அனைத்தல், முட்டுகொடுத்தல், விட்டம் கட்டுதல் போன்ற பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்க்கொள்ளவும். கொடிவகை பயிர்களில் பந்தல்களில் துருபிடித்து பழுதடைந்துள்ள கம்பிகள் மற்றும் தூண்களை கண்டறிந்து சரி செய்யவும். போதுமான முட்டுகளை கொடுக்கவும். பயிர்களுக்கு மருந்து தெளிக்கும் வேலைகளை ஒத்திவைக்கவும்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**
**முக்கிய பயிர்கள் : பருத்தி, நெல், கால்நடை.**

**பருத்தி:**

பருத்தி பயிரில் பூ மற்றும் பிஞ்சு உதிர்தல் பிரச்சினை ஆங்காங்கே காணப்படுகிறது.

இதனை சரி செய்ய, பூக்கும் மற்றும் காய்க்கும் பருவத்தில் உள்ள பருத்தி பயிரில் ஒரு ஏக்கருக்கு 2½ கிலோ என்ற அளவில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் பருத்தி பிளஸ் எனும் வளர்ச்சி ஊக்கியினை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து இலை வழியாக தெளிக்க வேண்டும்.

இதன் மூலம் பூ மற்றும் பிஞ்சு உதிர்தல் குறைகிறது, காய் வெடிக்கும் தன்மை அதிகரிக்கிறது, பருத்தி விதை விளைச்சல் அதிகரிக்கிறது.

மேலும் இது பருத்திச் செடிக்கு, வறட்சியைத் தாங்கி வளரும் தன்மையும் கொடுக்கிறது.

**மிளகாய்:**

நிலவும் பருவச்சூழ்நிலையில் மிளகாய் பயிரில் இலை சுருட்டு நோயின் தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. இவ்வகை நோயின் தாக்குதலால் மிளகாய் பயிரின் இலையின் நடுநரம்பு சுருண்டு, உருமாற ஆரம்பிக்கும், இலைகள் மிகச் சிறியதாகவும், சிறியளவு இடைக் கணுக்களுடன் வளர்ச்சி குன்றி காணப்படும். பூ மொட்டுகள் பெரிய அளவை அடையும் முன் நின்று விடும்.

தாக்கப்பட்ட செடிகளை வேருடன் களைந்து புதைக்க வேண்டும் அல்லது எரிக்க வேண்டும்.
ஒரே பயிரை திரும்ப திரும்ப பயிரிடக் கூடாது. 2-3 வரிசை மக்காச்சோளம் அல்லது சோளத்தை வரப்பு பயிராக பயிரிடவேண்டும்.

இதனைக் கட்டுப்படுத்த பத்து லிட்டர் தண்ணீருக்கு 5 கிராம் தையமெதாக்சம் அல்லது 10மிலி இமிடாக்ளோபிரைடு இவற்றில் ஏதேனும் ஒரு மருந்துடன் 10 மில்லி ஒட்டும்பசை சேர்த்து கலந்து தெளிக்க வேண்டும்.

**கால்நடை:**

தற்போது நிலவும் பருவச்சூழ்நிலையில் ஆடுகளுக்கு துள்ளுமாரி நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்பு உள்ளது. இந்நோய் எல்லா வயது ஆடுகளையும் தாக்கும். ஆனால் இளம் வயது ஆடுகளே பெரும்பாலும் பாதிக்கப்படுகின்றன. மழைக்குப்பின் புதிதாக முளைத்த பசுமையான புல்வெளியில் மேய்ச்சலுக்குச் செல்லும் ஆடுகளுக்கு இந்நோய் ஏற்படும். இறப்பதற்கு முன் வலிப்பு ஏற்பட்டு துள்ளி துள்ளி விழும்.

இந்நோயிலிருந்து ஆடுகளை பாதுகாக்க சூரியன் உதித்து ஒரு மணி நேரம் கழித்து ஆடுகளை மேய்ச்சலுக்கு அனுப்ப வேண்டும். உடனடியாக அருகில் உள்ள கால்நடை மருத்துவமனையை தொடர்பு கொண்டு ஆடுகளுக்கு துள்ளுமாரி நோய் தடுப்பூசி போடுதல் மிகவும் அவசியம் ஆகும்.